2008 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைபோல ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அந்தந்தப் பகுதிகளினுடைய தேவைகளை என் மத்தியிலே குறிப்பாக அளித்திருக்கிறார்கள். நிதிநிலைமைக்கேற்ப அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு விரைந்து எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 116. மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

116—

ஜவுளிப் பூங்கா

***24248—திரு. குத்தாலம் க. அன்பழகன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருபுவனத்தில் பட்டு, கைத்தறிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.கே.கே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருபுவனத்தில் பட்டு, கைத்தறிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மையும் நுணுக்கமும், தரமும் வாய்ந்த திருபுவனம் பட்டு இந்தியாவின் சிறப்புப்பெற்ற ஒன்றாகும். கழக ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி பரிசு பெற்ற நெசவாளர்கள் எல்லாம் அதிகமாக அந்தப்

பகுதியிலே வாழுகின்றார்கள். மேலும், திருநாகேஸ்வரம், அம்மாசத்திரம், தாராசுரம், அம்மாபேட்டை, குத்தாலம், கதிராமங்கலம், கும்பகோணம் பகுதிகளில் கைத்தறி நெசவாளர்கள் ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் வாழுகின்ற அந்தப் பகுதிகளில், அவர்களுக்கென்று பட்டு—கைத்தறிச் சங்கங்கள் நிறைய உள்ளன. ஆகவே, அவர்களின் நலன் கருதி திருபுவனத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டத்தினை அரசு மறுபரிசீலனை செய்து அதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்கேகேபி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளிப் பூங்கா என்பதே வியாபார நோக்கத்திலே நாம் போட்டியிட வேண்டும்; நம்முடைய நெசவாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற காரணத்திற்காகத்தான் தொடங்கப்படுகிறது.

அதிலும், இந்த பட்டு இரக நெசவைப் பொறுத்தவரை, பருத்தி இரகங்களில் செய்யப்படுவதைப்போல, உயர் தொழில்நுட்பத்தைப் புகுத்துவதற்கான வாய்ப்பு எதுவும் அதிலே கிடையாது. அதனால், பட்டு என்ற தனிப்பட்ட ஒரு நிலைக்காக, இந்த நெசவுப் பூங்கா தேவை இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10—10*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

117—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

***19502—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் மேல்நிலைப் பள்ளியில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?